காஞ்சி

ஆசிரியர்: சி.என். அண்ணாதுரை

மலர் 1 இதழ் 6



மலர் 1.] 30--8--64 [இதழ் 6

பிரச்சினைகளைத் தாமாகப் புரிந்துகொள்ள இயலாத நிலையினர், புரியவைத்திடப் பிறர் முயற்சி எடுத்துக்கொள்ளும்போது அதிலே அக்கரை காட்டாத போக்கினர், அக்கரை காட்டினுலும் கூறுவதை மனதிலே பதியவைத்துக்கொள்ளும் திறன் அற்றவர்கள், அந்தத்திறன் இருப்பினும் அறிந்துகொண்டதனை எண்ணி எண்ணிச் செயல்பட விருப்பம் கொண்டிடும் போக்கை மேற்கொள்ள விரும்பாதவர், இயலாதவர், முயன்று பார்த்து வெகு விரைவிலே கைவிட்டுவிடுபவர், என்று இன்னேரன்ன பல்வேறு நிலையினரும் போக்கினரும் எங்கும் உளர்; இங்கு அவர் போன்ருர் தொகை மிக அதிகம்.

இந்தக் காரணத்தாலேயே அக்ரமங்கள் தடுக்கப் படவும், அநீதிகள் துடைக்கப்படவும், அருவருப்புகள் அகற்றப்படவும் முடியாமலே போய்விடுகிறது. நோய் முற்ருமுன்னம் தக்க மருந்துண்ணுதான் பிறகு மருந்துகட்குக் கட்டுப்பட மறுத்துவிடும் விதமான உடலியல்பு பெறுதல்போல, அச்ரமத்தையும் அநீதியையும் தடுத்தொழித்திடும் இயல்புடன் நமது நாட்டவரில் மிகப் பெரும்பாலோர் இருந்து வருவதன் காரணமாக, பிறகோர் நாள், அநீதியை எதிர்த்தொழித்திட அவர் முயன்ருலும் அஃது முடியாததாகிப் போகிறது.

இவர் மட்டுமல்ல. மற்ருேர் சாரார் உளர், அவர்கட்கு, பிரச்சினை புரிகிறது, அக்ரமம் எது, அநீதி எது என்பது விளக்கமாகத் தெரிகிறது, அதனை எதிர்த்தொழித்தாக வேண்டும் என்பதும் புரிகிறது, அதற்கான ஆற்றலும் இருக்கிறது, எனினும் எதிர்த்து நின்ருல், இருப்பது கெடும் என்பதாலோ, கிடைப்பது குறையும் என்பதாலோ, பகை எழும் என்பதாலோ. பலம் சிதறும் என்பதாலோ, இந்த எதிர்ப்பை வேறு எவரேனும் முன்னின்று நடத்தட்டும், நாம் பின்னணி இருந்து அவர்களை ஊக்குவிக்கலாம் என்ற எண்ணமிடுகின்றனர்.

மற்ருேர் வகையினர் உளர்; அவர்கள் இவை ... அறிந்திருந்தும், உள்ளூர எவரோ ஒருவர் ...த்தை எதிர்த்து நிற்கின்றனர் என்பது ...ழ்ச்சி கொண்டிருந்தும், அதனைக்கூட ...் காட்டிக்கொள்ளாமம், அரவம் ...குள் ஒடுங்கிக்கொள்ளும் ஆமை

இன்னெரு வகையினர் உளர், அக்ரமத்தை எதிர்த்து நிற்போரின் போக்கு நியாயம் என்று உணர்ந்திருந்தும், அவர்கட்குத் துணை நிற்க வேண்டுவது முறைதான் என்று உள்ளூர உணர்ந்திருந்தும், தமது சொந்த நலனைப் பெருக்கிக்கொள்ள இந்தச் சூழ்நிலையையே சாதகமாக்கிக்கொள்ளலாம் என்ற நச்சு நினைப்பு கொண்டு; அக்ரமத்தை எதிர்த்திடுவோரின் வலுவினைக் குலைத்திடவும் முயற்சியினை முறியடித்திடவும், தமது ஆற்றலைப் பயன்படுத்தி, அக்ரமம் புரிவோனிடம் பரிவுகாட்டி, துணை நின்று, கேடு செய்பவர்கள்.

இந்தித் திணிப்புப் பிரச்சினை குறித்து நாட்டிலே காணப்படும் நிலைமையினை நன்கு ஆராய்ந்திடுவோருக்கு, நாம் மேலே குறித்துள்ள இத்தனை வகையினரும் உள்ளனர் என்பது புலப்படும்.

வருந்தத்தக்க, மன உளச்சலை மூட்டத்தக்க, இந்நிலை இருக்கும் காரணத்தாலன்ருே, தமிழகத்தில், தமிழ்ப் பேராசிரியர் ஒருவர், தமிழகத்து கற்றறிவாளர்கட்குக் கூறினுர், "மொழிச் சண்டையிலே நீவிர் எவரும் பங்கேற்றிடாதீர்!" என்பதாக!!

அத்துணை அக்கரை அவருக்கு — சண்டை கூடாது என்பதிலே!

அவ்வளவு கனிவு அவருக்கு எங்கே சிலர் இந்தச் சண்டையிலே பங்கெடுத்துக்கொண்டு பாழாகிவிடுகின்றனரோ, என்பதிலே.

அக்ரமமாக, அநீதியை மொழித்துறையிலே முரட்டுப் பிடிவாதத்துடன் புகுத்திடுவோர், என்ன எண்ணுவர், இந்தத் தமிழ்ப் பெரும் ஆசானின் அறிவுரை கேட்டு! இவரன்ருே நாம்கொள்ளத்தக்க பெருந்துணைவர் என்று எண்ணுவர். ஆயின், தமிழர் பொதுவாக என்ன கருதுவர்? தமிழ்மொழிகாத்திடும் பணிக்கு தமிழர் என்ற பெயர் கொண்டாரனைவரும் பயன்படுவர் என்ற நம்பிக்கைகூட கொள்ளமுடியாதுபோலிருக்கிதே என்று எண்ணித் தமிழர் கலங்குவர். கலங்குகின்றனர்!

விட்டுவிட்டு வெளிவருகிறது இந்தித் திணிப்பின் கொடுமைகள் பற்றிய செய்திகள். சிலர் கண்டனக் குரல் எழுப்புகின்றனர். சிலர் எதிர்ப்புமுறைபற்றி கருத்தறிவிக்கின்றனர். பிரச்சினை பலருடைய மனதிலே புகுந்து துளைத்தபடி இருக்கிறது என்பது தெரிகிறது.

ஒரு சலசலப்பு கேட்டது புதரருகே—ஒரு உறுமல் கிளம்பிற்று நேற்றிரவு—காலடி ஈரமண்ணில் பதிந்திருக்கக் கண்டேன்—ஒருவிதமான கெடுநெடி கிளம்பி உளது அந்தப்பக்கம்—

இவ்விதம் செங்நெல்வயல் சூழ்ந்த சிற்றூரில்—ஊரை ஒட்டியுள்ள குன்று சூழ் அடவியில் சிறுத்தை ஒன்று எங்கிருந்தோவந்து ஒளிந்துகொண்டிடும்போது, பேச்சு எழும்.

பிறகு, கன்று காணோம் எலும்புகளை நரிகள் தூக்கிக்கொண்டோடக் கண்டேன், மாடுகளை மடக்கிவிட்டதாம் சிறுத்தை, உடன் சென்றேன் உயிர் தப்பினால் போதும் என ஓடோடிவந்துவிட்டானும் என்ற முறையில் பேச்சுவளரும்.

அதற்குப்பிறகு; எப்படியும் சிறுத்தையைக் கொன்று போடவேண்டும், இல்லையேல், ஆடுதின்று மாடுதின்று, கடைசியில் மக்களையும் பலிகொள்ளும் சிறுத்தை, இரத்தவெறி கொண்டலையும் என்று பேசி, முடிவெடுத்து, முயற்சியில் ஈடுபட்டு, முடிவில் சிறுத்தையை அடித்துக் கொல்வர்—சிற்றூரார்.

அந்தச் சிற்றூரிலேயே சீமானும் சீமாட்டியும் இருப்பின் என் செய்வர்—இருப்பதில்லை—ஒரு சமயம் நகரத்துப் பரபரப்பினால் நரம்புகளுக்கு ஏற்பட்டுவிட்ட தளர்ச்சியைப் போக்கிக்கொள்ள கிராமீய வாழ்க்கையைச் சில நாட்கள் மேற்கொள்ளச் சொல்லி 'டாக்டர்' கூறியதனால் கிராமம் வந்திருக்கலாமன்றோ! அவர் இவர் எனக்கொள்வோம் — அவர்கள் என்செய்வர், சிறுத்தையை அடிக்க ஊரார் படைதிரண்டு செல்லும் போது? பொழுது சாயுமுன்பு, மோட்டாரில்கிளம்பி நகரம் சென்றுவிடுவோம், நமக்கேன் வீண் தொல்லை என்றுரைப்பார் சீமான், "ஆமாம், இன்று புதியபடம்! ஆப்பிரிக்கக் காட்டுவீரன் பற்றியது! அருமையாக இருக்கும், போய்ப் பார்க்கலாம்" என்பார். சீமாட்டி! சிற்றூரில் புதர்களைக் கலைத்தும், பறைஒலி எழுப்பியும், வேட்டுகள் கிளப்பியும், வீரர் சிறுத்தையை வேட்டையாடுவர்; சீமாட்டியோ, படக்காட்சியில் பதினறடி வேங்கையுடன் வீரதீரச் சண்டையிடும் கதாநாயகனின் கட்டுடல்பற்றிச் சீமானிடம் பேசிக்கொண்டிருப்பார்கள். இது உலக வாடிக்கை.

இந்தித் திணிப்பெனும் அநீதியை எதிர்த்து அறப்போர் நடாத்திச் சிறைப்பட்டு, கைகளில் விலங்குபூட்டப்படுபவதையும், களி தின்றும் வயற்றுக் கடுப்பு மூட்டும் விதமாகத் தயாராகும் சோற்றினை உட்கொண்டும், கல் உடைத்தும் மாவு அரைத்தும், கடினமான வேறு பல வேலைகளைச் செய்துகொண்டும், வாடிடும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மேற்கொண்டுள்ள தூய தொண்டுக்குத் துணை நிற்க வேண்டியது முறையாயிருக்க, அவர்தம் சீரிய செயலை நையாண்டி செய்தும், எதிர்த்தும், அந்த அறப்போர் கண்டு எள்ளளவும் கவலை கொள்ளற்க என்று மத்திய மேலரசுக்குக் கூறியும் திருத்தொண்டாற்றி வருபவர்கள் உளர்—தமிழர்களே என்று தம்மைக் கூறிக்கொள்கின்றனர்.

இந்தித் திணிப்பினைத் தமிழகம் எத்துணை துணிவுடனும் தீவிரத்துடனும் எதிர்த்து நிற்கிறது, எத்துணை இன்னல்களையும் இழிமொழியையும் ஏற்றுக் கொண்டாகிலும் இந்தியை எதிர்த்தாக வேண்டும் என்ற கடமை உணர்வு எவ்விதம் கொழுந்துவிட்டு எரிகிறது என்பதனை உணர்ந்தால் மட்டுமே இந்தி ஆதிக்கக்காரர்கள் தமது போக்கை ஒழித்துக் கொள்வர். இந்தி ஆதிக்கம் கூடாது, தீது என்று உணர்ந்தவர்கள் அனைவருமே அறப்போரில் ஈடுபட்டு, சிறை சென்றிட வேண்டும் என்கின்றோமில்லை. அந்தக் கடுமையை ஏற்றுக் கொள்ள கழகத் தோழர்கள் முன்வந்துள்ளனர்; மற்றவர்கள், ஒரு நல்ல வார்த்தை, ஒரு சிறு புன்னகை, ஒரு ஆதரவு நல்குவதுமா கூடாது! அதற்கேவா துரைத்தனம் துரத்தித் தாக்கும்? அத்துணை அச்சம் கொண்ட நிலையினர் அரசுக்கு அடிவருடிகளாகி, உரிமை இழந்து ஊமையராகிப் போவரேயன்றி, ஜனநாயக அரசு அமைத்திடும் பொறுப்பை மேற்கொள்ளத் தக்க நிலை பெற்றிடக்கூடுமோ!

நாடே பேசுகிறது, நல்லோர் அனைவரும் கூறுகின்றனர் என்று சொல்லத்தக்க விதமாக, இந்தி எதிர்ப்பு அறப்போரினுக்குப் பலரும் தமது ஆதரவினை, வெளிப்படையாகத் தந்திட முனைவரேல், எத்தகைய பெரியதோர் எதிர்ப்பு இந்தித் திணிப்புக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தி ஆதிக்கக்காரர்கள் உணர்ந்து, உள்ளத்தில் அச்சம் குடிகொண்ட நிலையினராகி தமது போக்கை விட்டொழிப்பார்களே. செய்தனரோ, சீலம் பேசிடுவோர்! இல்லையே!!

எனவேதான், சிற்சில வேளைகளில், இந்தி ஆதிக்கத்தின் போக்கை விளக்கியும்; அதனைக் கண்டித்தும் சிலர் பேசுவதையும் எழுதுவதையும் காணும்போது, பெரியதோர் சுமையைத் தூக்கிக்கொண்டு கடுவழி நடப்போனிடம் பரிவு காட்டி, தொலைவு குறைந்து கொண்டு வருகிறது, உன் துயரம் தீர்ந்திடும் கவலை கொள்ளாதே என்று நாலு நல்ல வார்த்தை கூறும் போது, சுமந்து செல்பவன் கொள்ளும் மகிழ்ச்சி போன்றதோர் மகிழ்ச்சி நாம் கொள்கிறோம்.

சென்னை மாநகராட்சித் தலைவர் பத்து நாட்களுக்கு முன்பு, இந்தி மொழி வெறி ஹைதராபாத்தில் நடைபெற்ற மேயர்கள் மாநாட்டிலே தலை விரித்து ஆடியதைக் குறிப்பிட்டுக் காட்டிக் கண்டனம் தெரிவித்திருந்தார். அது கண்டபோது, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நாம் நடாத்திக் கொண்டிருக்கும் அறப்போருக்கு எத்துணை நியாயமிருக்கிறது, தேவையிருக்கிறது என்பதைப் பலரும் உணர்ந்திட முடிகிறது.

இந்தக் கிழமை சங்கர் எனும் பெயருடையார் ஒருவர் இந்து இதழிலே வெளியிட்டுள்ள கடிதம், இந்தி ஆதிக்கம் எத்தகையது என்பதை மேலும் பலர் உணர்ந்திடச் செய்ய உதவுகிறது.

மேயர் கிருஷ்ணமூர்த்தி ஹைதராபாத் மேயர்கள் மாநாட்டிலே நடைபெற்றதைக் கூறினாரல்லவா, நான் ஒன்று கூறுகிறேன் கேளுங்கள் என்ற முறையில் துவக்கி, அந்த நண்பர் மற்றோர் நிகழ்ச்சியைக் காட்டியுள்ளார்.

> சில ஆண்டுகளுக்கு முன்னால், அப்போதைய மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் சீமாலி கல்வித் துறை ஆலோசகர்கள் மாநாட்டை டில்லியில் தலைமை வகித்து நடத்தினர். கல்வித் துறை நெறியாளர்களும், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களும், கலந்துகொண்டனர். மாநாடு சீராக நடை

பெற்றுக் கொண்டிருந்தது. அப்போது, உத்திரப் பிரதேசத்தில் கல்வி அமைச்சராக இருந்துவந்த கமலாபதி திரிபாதி இந்தி மொழியில் முழங்க ஆரம்பித்தார். இந்தி பேசாத பகுதியினருக்குப் புரியாத முறையில். பலர் வேண்டிக் கேட்டுக்கொண்டனர். ஆங்கிலத்தில் பேசும்படி. வேண்டுகோளைத் துச்சமென்று தள்ளினார்; இந்தியில்தான் பேசுவேனென்றார். இந்த இந்தி இடிமழைக்குப் பிறகு, ஆந்திர நாட்டுக் கல்வி அமைச்சர் பட்டாபி ராம ராவ், சுந்தரத்தெலுங்கினில் பேசலானார். இந்தி பேசாத பகுதியிலிருந்து வந்திருந்தோர் கையொலி எழுப்பிக் களிப்பு காட்டினர்; மற்றையோர் வாயடைத்துக் கிடந்தனர். தலைவர், வேண்டிக் கொண்டதன்பேரில், பட்டாபிராமராவ், ஆங்கிலத்தில் பேச முற்பட்டார்; பெரிய மனிதர்!

இந்தி பேசாத பகுதியில் உள்ள நாம் ஒன்றை உணரவில்லை. நம்மீது திணிக்கப்படுவது இந்தி மொழி மட்டும் அல்ல; இந்தி மொழியினர் தங்கள் பண்பாடு போக்கு சுபாவம் ஆகிய அனைத்தையும் நம்மீது திணிக்கிறார்கள். அனைத்தையும் நாம் சுமந்து தீர வேண்டி இருக்கிறது.

இந்தக் கருத்துப்பட, இந்து இதழில் இந்தித் திணிப்பு என்ற தலைப்பிட்டு இவர் கடிதம் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தித் திணிப்பின் தன்மையும், இந்தி ஆதிக்கக்காரர்களின் போக்கிலே உள்ள கொடுமையும் இதனால் மிக நன்றாக விளக்கமாகிறது.

ஆமாம்; அப்படித்தான் நடக்கிறது; ஆனால்...?

அக்ரமம் என்பது புரிந்தபிறகும், அநீதி என்பது தெரிந்தபிறகும், அதை எதிர்க்காவிட்டால் அக்ரமும் அநீதியும் எப்படி ஒழியும்?

அந்த அக்ரமத்தையும் அநீதியையும் எதிர்த்தொழிக்கத்தான் அறப்போர் நடத்திவருகிறது திராவிட முன்னேற்றக்கழகம்.

அதிலே சேர்ந்து பணியாற்ற இயலாதுபோயினும், அந்த அறப்போர் வலுவடைய தமது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும், அன்பையும் ஆதரவையும் அருளிடும் அளவுக்காவது மொழி ஆர்வம், உரிமை வேட்கை கொண்டெழ வேண்டாமோ? இல்லையேல், நாடு, வாளாயிருப்போரை ஒன்று அடங்கிக்கிடப்போர், அடிமைகளானோர் என்று எண்ணிக்கொள்ளும் அல்லது அச்சத்தால் செத்தவாழ்வு கொண்டோர் என்று எள்ளி நகையாடும். திராவிட முன்னேற்றக் கழகத்தையா பாராட்டுவது வளரச்செய்வது என்று எண்ணிக்கொண்டு வாளாயிருப்பவர்கள், நிலை இதுதான்.

அவ்வப்போது, இந்தி ஆதிக்கத்தின் கொடுமையினை விளக்கிடும் பணியாற்றிட முன்வருபவர்களை நாம் மனதாரப் பாராட்டுகிறோம்.

கொடுமை நடைபெற்றபடி இருக்கிறது; அதனை இல்லை என்று மறுப்பவர்க... சென்ற கிழமை, 'தினமணி' நாம் பயன்படுத்த அச்சப்படும்படியான கடுமையான சொல்கொண்டு தாக்கி எழுதியிருக்கிறது.

கொடுமை இருப்பதை விளக்கிவிடுவதோடு பணி முடிந்துவிடவில்லை; முடிவடையாது.

கொடுமையை மட்டும் எடுத்துக் காட்டும்போது, அதனைக் காண்பவர்கள் என்ன சொல்வர்? ஆமாம், அப்படித்தான் நடக்கிறது. ஆனால்...! என்பர்.

திராவிட முன்னேற்றக் கழகம், ஆனால்... என்று தயக்கமொழி பேசிக்கொண்டிராமல், அக்ரமம், ஆகவே எதிர்க்கிறோம் என்று துணிந்து பணியாற்றி வருகிறது.

முயற்சிக்கு நன்றி!

பர்மாவிலிருந்து தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டு, திரும்பி வந்துள்ளனர்; சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

இங்குமங்குமாக அவர்களின் இன்னலைத் துடைத்திட, வேலை பெற்றுத்தந்திட மேற்கொள்ளப்படுபவைகள், கடலிற் காயமாகிவிடுகிறது.

பகைவர்களால், உள்ளதனைத்தையும் இழந்துவிட்டு பதைத்தோடி வருபவர்களைப் பார்த்ததுண்டு; ஒரு நேச நாட்டிலிருந்து நமது மக்கள் இவ்விதமாகத் துரத்தப்படுவது நாம் காணாதது, கேட்டறியாதது.

அவர்கள், தங்க இடமற்று, எவர் உறவினர் எவர் உதவி செய்திடவல்லவர் என்பதும் தெரிய முடியாத நிலையில், திக்கற்றோராகித் தேம்பித் தவிக்கின்றனர்.

அவர்களின் சீர்குலைந்துபோன வாழ்வினைச் செப்பனிடுவது ஒரு அரசு மேற்கொண்டேயாக வேண்டிய அறம்.

அந்த அறநெறி மறந்திடும் அரசினை மக்கள் தாங்கிக்கொண்டிருக்க மாட்டார்கள் நெடுநாளைக்கு.

அவர்களின் வாழ்வைச் செப்பனிட திட்டமிட்ட நடவடிக்கை தேவை-தானதருமம்-தயைதாட்சணியம் மட்டும் போதாது.

இந்தத் திட்டத்துக்காகப் பெரும்பொருள் தேவைப்படும்; அது மாநில அரசு திரட்டிக்கொள்ளட்டும் என்று இருந்திட முனைகிறது இந்தியப் பேரரசு.

இது அருவருக்கத்தக்க போக்கு என்பதனை நாட்டவர் நன்கு உணருகின்றனர்,

நாடாளும் பக்தவத்சலனார் அவர்களும் இது போன்ற உணர்ச்சி கொண்டு, பர்மாவிலிருந்து திரும்பியுள்ள தமிழர்களின் இன்னல் போக்கிட, இந்தியப் பேரரசு உடனடியாக முனைந்திட வேண்டும் என்று கேட்டிருப்பதாக அறிகிறோம். அந்த நன்முயற்சிக்கு நன்றி கூறிக்கொள்கிறோம்.

ஆனால் கேட்டதுடன் தமது கடமை முடிந்துவிட்டதாகக் கருதிக்கொள்ளாமல், தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டு, பேரரசிடம் பெருந்தொகை பெற்று, பர்மாவில் பொருளையெலாம் பறிகொடுத்துவிட்டு, போக்கிடமற்று இங்கு வந்துள்ள 'நமது இரத்தத்தின் இரத்தம், சதையின் சதை'யான மக்களின் இன்னல் துடைத்து வாழ்வளித்துத் தரவேண்டும். அதுவே அறம்; அஃதே அரசு மேற்கொள்ள வேண்டிய நெறி.

தம்பி

என்னை வாழவிடு! விலைகளைக் கட்டுப்படுத்து!

தாய்க்குலத்தின் தனித் திறமையிலே எனக்கு எப்போதுமே தளராத நம்பிக்கை உண்டு; அந்த நம்பிக்கை மேலும் வளரததக்க விதத்திலே ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது; மன நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தத்தக்க நிகழ்ச்சி அது.

இந்தக் கிழமை, வடக்கே உள்ளவர்கள் ஒரு நோன்பு கொண்டாடுகின்றனர்; அதனை ரட்சாபந்தன தினம் என்கிறார்கள்—நோன்பிருந்து கஙகணம் கட்டிக்கொள்வது.

இந்தத் திருநாளைக் கொண்டாடும் தாய்மார்கள், டில்லிப் பட்டணத்தில் லால்பகதூர் அவர்களைக் கண்டு தமது வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் கூறிவிட்டு, அங்கு உள்ள முறைப்படி ஒரு ரட்சையை—நோன்புக்கயிறு—அவருடைய கரத்தில் கட்டினார்கள்.

மரியாதை செலுத்தவும் அன்பு தெரிவிக்கவும் மேற்கொள்ளப்படும் இந்த நிகழ்ச்சியை, தாய்மார்கள் மெத்த அறிவுக்கூர்மையுடன், இன்று நாட்டின் நாயகர் எதனை மேற்கொள்ள வேண்டும் உடனடியாக என்பதனைச் சுட்டிககாட்டிட ஒரு நல்வாய்ப்பாக்கிக் கொண்டு, "அண்ணா! இந்தத் திருநாளில் எமக்கொரு பரிசு தரவேண்டும்" என்று கேட்டனராம்; "என்ன வேண்டுமம்மா?" எனறு கேட்ட லால்பகதூரிடம் அந்தத் தாய்மார்கள், எமது குடும்பங்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் வசதிகளைச் செவ்வனே செய்துகொடுக்க உணவு, உடை, கல்வி ஆகியவற்றைப் பெற்று வாழ்வினை நடாத்தவும் தாங்கள் உடனடியாக ஒன்று செய்யவேண்டும்; என்னவெனில்,

பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

கள்ளச் சந்தையை ஒடுக்கவேண்டும்.

கலப்படத்தைப் போக்கவேண்டும்.

என்று கூறினராம்!

குற்றுயிராகக் கிடக்கும் கணவன் பிழைத்தெழவேண்டும் என்பதற்காக, கசியும் கண்களுடன் மருத்துவரின் தாள்தொட்டுக் கும்பிட்டபடி கேட்பதுண்டல்லவா, "எனக்கு மாங்கல்ய பிச்சை தாருங்கள்" என்று, அதுபோலவும், பெற்றெடுத்த குழந்தைக்குப் பேராபத்து ஏற்பட்டது கண்டு, மருத்தவரிடம் செனறு, என் குலவிளக்கு அணையாதிருக்க வழி கூறுங்கள். என் குலக கொடி பட்டுபபோகாதிருக்க ஒரு மார்க்கம் காட்டுங்கள்" எனறு கெஞ்சி நினறிடும் முறையிலும், இந்தத் தாய்மார்கள். எமது குடும்பம் சிதையாதிருக்க, எமககு வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கிடைத்திடச் செய்யுஙகள் என்று, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள லால்பகதூரிடம் கேட்டு நின்றனர்.

லால்பகதூர் ஏழைக் குடியில் பிறந்தவர், வாழ்க்கை இன்னல்களை நன்கு உணர்ந்தவர். வாழ்க்கை இன்னல்களை ஏற்றுக்கொள்ளும் துணிவற்று, குடும்பம் என்பதே பெரியதோர் சுமை



இதனைத் தாங்கிட நம்மால் ஆகாது என்று ஒதுங்கி விடாமல், ஒண்டிக்கட்டையுமாகிவிடாமல், குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, பொறுமையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும், அதனை நடத்தி வருபவர். எனவே அவருக்கு, ஏழை, நடுத்தரவகுப்பினர் ஆகியோரின் இன்னல்கள்பற்றி நன்கு தெரிந்திருக்க நியாயம் இருக்கிறது. எனவே அண்ணு! எமக்கு உணவு, உடை, இவைகளேனும் கிடைத்திடச் செய்திடுவீர்! என்று அந்தத் தாய்மார்கள் கேட்டு நின்றது கண்டபோது அவருடைய கண்களில் நீர்துளித்திருக்கும்.

மாடுமனை கேட்கவில்லை
ஆடைஅணி கேட்கவில்லை
ஆடம்பரப் பொருள் கேட்கவில்லை

உணவு — உடை — குடும்பம் நடாத்திச் செல்ல வழி, இவைகளையே கேட்டனர் அந்த மாதர்கள்.

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் — நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்—இருபத்தி இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவிடப்போகிருர்கள் சர்க்கார் — நாட்டை வளப்படுத்த, செல்வம் கொழித்திடும் நிலை காண!! தெரியுமா, தம்பி! 22000 கோடி ரூபாய்.

இந்த நிலையின்போது, அந்தத் தாய்மார்கள் கேட்டிருப்பது, உணவு, உடை இவையே. என்ன அதன் பொருள்? ஆண்டு பதினேழு ஆகியும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைக் காட்டிய பிறகும், எல்லோருக்கும் உணவு கிடைத்துவிட்டது, உடை இருக்கிறது உறையுள் இருக்கிறது என்று கூறிடத்தக்க நிலை, நாட்டிலே இல்லை. இதனை மறந்த ஒரு தலைவர் இருக்கிருர், அவர் அரசோச்சும் நிலைபெற்றும் இருக்கிருர், அவரிடம்சென்று முறையிடுவோம் என்று தோன்றிற்று அந்தத் தாய்மார்களுக்கு என்பதன்ருே பொருள்.

பாலுந்தேனும் கலந்தோடும்! சுயராஜ்யம் சுகராஜ்யமாக இருக்கும்! தனியொருவனுக்கு உணவில்லை எனும் முறை ஒழிந்திடும்! என்றெல்லாம் காங்கிரசார் எழுப்பிய முழக்கமதைச் செவிமடுத்திருப்பாரன்ருே, இந்தத் தாய்மார்கள், அஃதேபோல நடந்திடும், நாடு சீர்படும், வாழ்வு வளம்பெறும், என்று எதிர்பார்த்திருந்திருக்கிருர்கள். அவசரப்படேல்! என்றனர், ஆமென்றனர் தாய்மார்கள். வித்திடுகிருேம் என்றனர் ஆட்சியினர், முளைகாணத் துடித்தனர் தாய்மார்கள். கதிர் ஒருமுழம் காணீர்! என்றனர் நாட்டின் காவலர், களிநடமிடுவோம் என்றனர் மாதர்கள்; பசிப்பிணி ஒழிந்திடும், வறுமை ஒழிந்திடும் என்று கருதினர். ஆனல் மேலும் மேலும் அறுவடை நடந்தது, நிரம்பி நிரம்பி வழிந்தது களஞ்சியம், ஏழை எளியோர் குடியில் அல்ல, எத்தர்கள் கட்டிய சூதுக்கோட்டைகளில். வயலின் பசுமை தொழிலின் மாண்பு என்பவை பொன்னுகிப் பொருளாகி பருகுவனவாகி பூசுவனவாகி உடுப்பனவாகி உல்லாசமுமாகி, உப்பரிகை வாழ்வோரிடம் சென்று சிறைப்பட்டிடவே, ஏழையர் வறியராயினர், ஏக்கமே அவர்கள் கண்டு பெற்றது. இந்நிலை இவராட்சியின்போது ஏற்பட்டுவிட்டதனை, எத்தனை பக்குவமாகச் சுட்டிக்காட்டுகின்றனர் தாய்மார்கள்; எமக்கொரு வரம்தாரும்! உயிர் இருந்திட வழிகூறும்!! என்று.

எவரும் மலைத்துநிற்பர் இந்நாட்டில் இந்தப் பதினேழு ஆண்டுகளாகக் கொட்டப்பட்ட பணத்தின் அளவினை அறிந்திடும்போது — எனினும் அத்தனையும் தமக்குப் பயன்படாமல் எங்கெங்கோ சென்றுவிட்டதை உணரும் போது, உள்ளம் நொந்திடத்தானே செய்யும். அங்கிலை பெற்றவரெனின் அரிவையர், இடித்துரைப்போர் பலர் உளர், நாம் இவர் இதயம் தொட்டிடும் இனிய முறையில் நாடு உள்ள நிலையைக் கூறுவோம் என்று கருதி— மெல்லியலாரன்ருே மாதர்-நோன்புக்கயிறு கட்டிவிட்டு, லால்பகதூரிடம் கேட்டிருக்கிருர்கள்,

விலைகளைக் கட்டுப்படுத்துக
கள்ளச் சந்தையை ஒழித்திடுக
கலப்படத்தை ஒழித்திடுக!

என்று. ஆண்டு பதினேழு ஆகியும் இந்த மூன்று அடிப்படைகளையும் ஜோபதிடக்காணுேமே, நாங்கள் எங்கனம் குடும்பம் நடாத்துவது, உண்ணும் பொருளில் மண்கலந்து, உள்ளதை மறைத்து விலை ஏற்றி, அளப்பதில் நிறுப்பதில் அநியாயம் செய்து எமை அலைக்கழிக்கின்ருர் அறமறியார், அரசுமுறை அறிந்தவரே! ஏழையின் துயர் ஈதெனத் தெரிந்தவரே! விலைகளைக் கட்டுப்படுத்தி, கள்ளச் சந்தையை அழித்து, கலப்படத்தை ஒழித்து எமைக் காத்திடுவீர் என்று கேட்டனர் அக்காரிகையர்.

பக்ராநங்கல் பாரீர்! தாமோதர் திட்டம் காணீர! சித்தரன்சனின் சிறப்பறிவீர்! பிலாய் ரூர்கேலா பெருமை காணீர்!! என்றெல்லாம் சொல்லிச் சொல்லி பதினேழாண்டுகள் ஓட்டியாகிவிட்டது, இனியும் ஒட்டிய வயிற்றினருக்கு இந்தப் பட்டியல் அளித்திடுதல் புண்ணிலே புளித்ததைத் தெளித்திடுவது போன்ற செயலாகும், எமக்கு வாழவழி செய்து காட்டுங்கள்! இந்த நன்னுளில் எமது வேண்டுகோள் இதுவே! உணவு! உடை! பிள்ளைகுட்டிகள் பிழைத்திருந்து படித்திட வசதி! இவைபோதும், இவற்றினை எமக்கு அளித்திடுக!—என்று கேட்டுள்ளனர்.

இம்மட்டோடு விட்டார்களில்லை மாதர்கள்.

லால்பகதூரின் கரத்திலே அவர்கள், உடன்பிறப்பாளர் எனும் பரிவுணர்ச்சியுடன் கட்டிய 'ரட்சை' இருக்கிறதே, அது புதுவிதமானதாம்! அந்த ரட்சையில் ஒரு குழந்தையின் படம் பொறிக்கப்[பட்டிரு]க்கிறதாம்! அந்தப் படத்திலே

என்னை வாழவிடு!
விலைகளைக் கட்டுப்படுத்து!!

என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ள[த]ாம்.

நிச்சயமாக லால்பகதூரின் நெ[ஞ்]சம் நெகிழ்ந்து தான் இருக்கும். படிப்போருக்கே நெ[கி]ழ்கிறதே.

முதலாளிகள் கேட்கிருர்கள் லால்ப[க]தூரை; புதிய புதிய யந்திரங்கள் வாங்கிட அன்னிய[ச்] செலாவணி உரிமை கொடுங்கள் என்று.

தொழிலதிபர்கள் கேட்கின்றனர், [எ]மக்குக் கடன் கொடுங்கள், வட்டியின்றி அல்லது [மி]கக்குறைந்த விகிதத்தில் என்று.

குழந்தை கேட்கிறது, என்னைவா[ழவி]டு! விலைகளைக் கட்டுப்படுத்து!! என்று.

புதிய மாளிகை கட்ட இரும்புக்[கம்]பங்களும் 'டன் டன்னுக'ச் சிமிட்டியும் தருக, உடனே — என்று கேட்டிடும் பணம் படைத்தான்கள் உ[ள்ளனர்] — லால்பகதூர் கண்டதுண்டு.

சென்ற ஆண்டு கிடைத்ததைவிட இவ்வாண்டு கிடைத்த இலாபம் குறைவாக இருக்கிறது; இந்த நஷ்டத்தால் மெத்தக் கஷ்டப்படும் எமக்கு, வரியில் சலுகை செய்தளியுங்கள்; நாங்கள் செல்வத்தைப் பெருக்கிடும் சேவையில் ஈடுபட்டு இருப்பவர்கள் என்று கேட்டிடும் சீமான்கள் உள்ளனர்; லால்பகதூர் பார்த்திருக்கிறார்.

ஒரு பச்சிளங் குழந்தை, என்னை வாழவிடு! விலையைக் கட்டுப்படுத்து!! என்று கேட்டிடும் காட்சியை அவர் கண்டதில்லை; காண்கிறார்; காணச் செய்தனர் தாய்மார்கள்.

எத்தனை உள்ளம் உருக்கும் நிகழ்ச்சி இது. ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர், காணக் கூசிடத் தக்கதோர் நிலை நாட்டிலே நெளிகிறது என்பதைக் காட்டிட வன்றோ, குழந்தையின் படம் பதித்த 'ரட்சை'யைக் கட்டினார்கள் தாய்மார்கள்.

விலைவாசி விஷமென ஏறியபடி இருப்பது, எத்தகைய விபரீதமானது, என்னென்ன கொடுமைகளுக்கு வழி செய்திடக் கூடியது என்பதனை விளக்கிட, அஃது எதிர்காலத்தையே ஆபத்தானதாக்கத்தக்கது என்பதனை எடுத்துக் காட்ட, ஒரு குழந்தை, நான் வாழ வேண்டும், நான் வாழவேண்டுமானால் என்னை வளரச் செய்திட என் குடும்பம் வழி பெறவேண்டும், அந்த வழி கிடைக்கவேண்டுமானால், விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றெல்லாம் கூறிடுவது போல,

என்னை வாழவிடு
விலைகளைக் கட்டுப்படுத்து

என்று கேட்டுக் கொள்வதாக வாசகத்தைப் பொறித்தளித்துள்ளனர்.

கட்டி முடித்த தொழிற்கூடங்கள், அமைத்தாகி விட்ட தேக்கங்கள், உருண்டு ஒலி கிளப்பும் யந்திரச் சாலைகள் எனும் எவைகளைப் படம் போட்டுக் காட்டித்தான் என்ன பலன், இந்தக் குழந்தையின் படம் கண் வழிச் செல்லாமலேயே எவர் நெஞ்சிலும் சென்று பதிந்து விடுகிறதே! உள்ளத்தை உருக்கிவிடுகிறதே!!

தாயைத்தான் தேடுகிறேன் என்று புலம்பிடும் குழவியைக் காட்டிலும், உள்ளத்தை உருகச் செய்திடக்கூடிய காட்சி இருந்திட முடியாது என்று இது நாள்வரை நான் எண்ணிக் கொண்டிருந்தேன், தம்பி! இந்தக் காட்சி இருக்கிறதே—படமாக மட்டுமே உளது எனினும்—அதனையும் மிஞ்சுவதாக உளது. நான் பிழைப்பதும் மடிவதும், ஆட்சிப்பொறுப்பின் முதல்வரே! உமது கரத்தில் இருக்கிறது. என்ன செய்து என்னை வாழ வைத்திடுவது என்று எண்ணி வாட்டம் கொள்ளவேண்டாம், நானே சொல்கிறேன் தக்க வழிதனை; விலைகளைக் கட்டுப்படுத்துங்கள், நான்பிழைத்துக் கொள்வேன் என்றன்றோ குழந்தை கூறுவதாகத் தெரிகிறது 'ரட்சை'யில் பொறித்துள்ள வாசகத்தை பொருள் பிரித்துப் பார்த்திடும்போது.

எந்த ஒரு ஆட்சியும் இந்த நிலை வந்துளது என்பதனைக் கண்டு கண் கசியாதிருந்திட முடியாது. அதிலும் குடும்பம் நடாத்தி, ஆங்குக் குமுறலும் கொதிப்பும், பசித் தீயினால் பதைப்பும் பிணிக் கொடுமையால் வேதனையும் கிளம்பிடுவதைக் கண்டு மனக் கலக்கம் கொண்ட பழக்கம் பெற்றுள்ள எவருக்கும்' கண் கசிந்திடாதிருந்திட முடியாது.

இல்லை! இல்லை! மிகைபடுத்திக் கூறுகிறார்கள். உணவு நிலைமை அப்படி யொன்றும் மோசமாக இல்லை, விலைகள் ஓரளவு ஏறி இருக்கிறது என்றாலும், பெரிய நெருக்கடி ஏதும் ஏற்பட்டு விடவில்லை என்று இங்கு நாட்டின் நாயகர்கள் பேசுகின்றனர்—எதிர்ப்புக் குரலையும் ஏக்கப் பேச்சினையும் மறுத்திடவும் மறைத்திடவும்.

இலண்டனில் உள்ள இதழ்—இந்திய சர்க்காரிடம் ஆதரவு காட்டும் இதழ்—எழுதுகிறது.

சீனப்படையெடுப்பின்போது எத்தகைய
நெருக்கடிநிலை இருந்ததோ அதுபோன்ற
தோர் நெருக்கடி நிலைமை உணவு முனையிலே
இன்று இந்தியாவில் ஏற்பட்டுவிட்டிருக்கிறது

என்று, இதனையும் லால்பகதூரின் அரசு மறுத்திடும்; ஆனால் வார்த்தைகள் மறுப்புரைக்குமே தவிற, இந்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எதனைக் காட்டுகிறது. நெருக்கடிநிலை இல்லாமலா,

கோதுமை! கோதுமை!
மேலும் மேலும் கோதுமை!
அரிசி! அரிசி! மேலும் சிறிதளவு அரிசி!

என்ற 'கோஷமிட்டபடி' இந்தியத் தூதரக அலுவலர்களும் துரைத்தன மேலதிகாரிகளும் பல்வேறு நாடுகள் சென்றபடி உள்ளனர்.

கேட்டோம், தருகிறார்கள்!

வருகிறது உணவுப்பண்டம் கப்பல் கப்பலாக!

என்று துரைத்தனம் அறிவிப்பது எதற்காக? அச்சம் கொள்ளாதீர், கவலை காட்டாதீர், என்று கேட்டுக் கொள்ளவன்றோ.

உணவு உற்பத்தி பெருகிவருகிறது! விளைச்சலின் தரம் மிகுந்திருக்கிறது என்று முன்பு பேசிய பேச்செல்லாம் பொய்த்துப் போச்சே.

எத்தனை காலத்துக்கு உணவுப் பொருளுக்காக வெளிநாட்டை நம்பிக்கிடப்பது—வேதனையாக இருக்கிறது—வெட்கமாகக்கூட இருக்கிறது—இனி அந்தப் பழக்கத்தை விட்டொழிக்கத் திட்டமிட்டுவிட்டோம்—வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருளை வாங்கமாட்டோம் என்று முழக்கிய உறுதிமொழிகள் உயிரற்றனவாகிவிட்டனவே.

இப்போது அமெரிக்கா அனுப்புகிறது; பாகிஸ்தான் விற்றிருக்கிறது; தாய்லாந்[illegible]க்கு ஆட்கள் போகிறார்கள் அரிசி வாங்க; என்று [illegible]செய்திகளை சர்க்காரே தந்தபடி உள்ளனர்.

ஒரு பெரிய பஞ்சம், பெருவெள்ளம், அல்லது மழையே பெய்யாத நிலை, நி[illegible]டுக்கம் எனும் ஏதேனும் ஓர் இயற்கைக் கோளாறு[illegible] ஒரு நாடு சோற்றுக்குத் திண்டாடும்[illegible]ம்போரிலே சிக்கி வயல்களின் பசுமை க[illegible]விடும்போதும் வெளிநாடுகளிலிருந்து உ[illegible]பொருள்களைக் கேட்டுப் பெறுவது முறை, நி[illegible]னால் அவ்விதமான இயற்கைக் கேடுகளோ, [illegible]ட்பட்ட போரோ ஏதுமின்றியே, நாம், உ[illegible]பொருளுக்காக, அமெரிக்கா, பாகிஸ்தான், தா[illegible] எனும் பல நாடுகளிடம் தஞ்சம் அடைகி[illegible] உதவி பெறுகிறபோது, இங்கு இந்த நிலை[illegible]க் காரணமாக இருந்த அரசிடம்

மதிப்பா பிறந்திடும்? அனுப்புகிறார்கள் உணவுப்பொருள் — ஆனால் அவைகளை அனுப்பும்போது எத்தகைய கேலிப் புன்னகை எழுந்ததோ யார் கண்டார்கள்!

அமெரிக்கத் தூதுவர் செஸ்டர்பவுல்ஸ் கூறுகிறார்,

இப்போது நாங்கள் அனுப்பத் திட்டமிட்டிருப்பது நாற்பது இலட்சம் டன் கோதுமை 300,000 டன் அரிசி. இதுவரை நாங்கள் அனுப்பியிருப்பது 230 இலட்சம் டன் உணவுப்பொருள் என்கிறார்.

படிக்கும்போது இந்தச் செய்தி பாகெனவா இனிக்கும்!!

இன்று நேற்றல்ல, நெடுநாட்களாக உங்களுக்கு நாங்கள் உணவுப் பொருளை அனுப்பியபடி இருக்கிறோம் என்று சுட்டிக்காட்டுவது — குத்தலுக்காக அல்ல என்றே வைத்துக்கொள்வோம்—பொருளற்றதா?

இப்படி உணவுப்பண்டத்துக்கே திண்டாடுகிறீர்களே! இத்தனைக்கும் விவசாய நாடு என்கிறீர்கள், கிராமங்களே முதுகெலும்பு என்கிறீர்கள், புதிய தேக்கங்கள் கட்டியிருக்கிறீர்கள், அணைகள் பலபல என்று பட்டியல் காட்டுகிறீர்கள், நவீன விஞ்ஞான முறை எனப் பேசுகிறீர்கள், ஜப்பானிய முறை என்கிறீர்கள் சத்து உரம் என்கிறீர்கள், மின்சார இறைப்பு என்கிறீர்கள் சமுதாயநலத் திட்டமென்கிறீர்கள், கூட்டுறவு என்கிறீர்கள், நிலச்சீர்திருத்த சட்டம் என்கிறீர்கள், பொறுக்கு விதை, பொலிகாளை, எருக்குழி, மண் அரிப்பு தடுப்பு என்று பலப்பல பேசுகிறீர்கள், என்றாலும் இந்த ஆண்டுகளில் நாங்கள் டன்களை உங்களுக்கு அனுப்பி இருக்கிறோமே, என்ன ஆயிற்று உங்கள் திட்டங்கள்? என்ன கதியாகிவிட்டது கொட்டிய ஆயிரமாயிரம் கோடிகள் — என்றெல்லாம் செஸ்டர் பவுல்ஸ் கேட்கிறார் என்றல்லவா பொருள்! சுதந்திரதின விழாவன்று கிடைத்திடும் பொற்பதக்கமா இது? பொறுப்பிலுள்ளவர்கள் எண்ணிப்பார்த்திட வேண்டும், போய்ச் சேர்ந்ததுகள் அல்ல!

தம்பி! அமெரிக்கத் தூதர் சொல்கிறார், எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறோம் உணவுப் பொருள். எம்மிடம் தயாராக இருக்கிறது. ஏற்றிச் செல்லும் கப்பல்களும் உள்ளன, தேவைக்கு அதிகமாகவே. ஆனால் நாங்கள் ஏற்றி அனுப்பும் பொருளை இறக்கி எடுத்திட முடியவில்லையே இந்திய சர்க்காரால், நாங்கள் என்ன செய்ய என்று கேட்கிறார். ஆமாம் என்கிறார்கள் லால்பகதூர்கள்; அப்படியானால்......என்று கேட்கிறார் செஸ்டர்பவுல்ஸ், [illegible]றைமுகத்தில் பண்டங்களை இறக்க ......என்று இழுத்[illegible]ப் பேசுகிறது இந்தியப் பேரரசு, அதற்கான வழிமுறை கூற, உடனிருந்து உதவ நிபுணர்களையும் அமெரிக்காவிலிருந்து தருவிக்கிறேன் என்று கூறுகிறார் செஸ்ட[illegible]ர்பவுல்ஸ்.

தம்பி! ஒன்[illegible]ரிவுபடுத்தி விடுகிறேன்— அமெரிக்கா போ[illegible]டுகளிலிருந்து உணவுப் பொருள் இங்கு வரு[illegible] குறை கூறவில்லை— அதுவும் இல்லையென[illegible]ளவு நெருக்கடி பேராபத்தை மூட்டிவிடும். இ[illegible]. உணவுப் பொருளை இனமாகவோ கடனுக்கோ[illegible] மாற்றுக்கோ பணம் பெற்றுக் கொண்டோ செ[illegible]வுவோர் பலப் பல இலட்சக் கணக்கானவர்களை[illegible]லிருந்து காப்பாற்றுகிறவர்கள் ஆகிறார்கள் —[illegible]ன் நன்றிக்கும் உரித்தானவர்களாகிறார்கள்; இ[illegible]னர் மறந்திடவுமில்லை மறுத்திடவுமில்லை; ஆனால் 17 ஆண்டு ஆட்சி நடாத்திய பிறகு, இந்த நிலையைத்தானா நாடு பெற வேண்டும், காங்கிரசின் மூலம் என்று கேட்கிறேன்.

தம்பி! ரேவுத் துறையிலே மூட்டைகளை எப்படி, விரைவாக, இலகுவாக இறக்குவது என்பதற்கு அமெரிக்க நிபுணர்கள் வருகிறார்கள் என்று கூறினேனல்லவா! வருகிற நிபுணர்கள் இந்தத் துறைக்காக மட்டுமல்ல. என்னென்ன துறைகளுக்கு, நிபுணர்கள் அமெரிக்காவிலிருந்து இங்கு வந்தபடி இருக்கிறார்கள், சொல்லவா! கேலிக்காக அல்ல. நாடும் அதற்கு அமைந்துள்ள ஆட்சி முறையும் இருக்கிற இலட்சணத்தைத் தெரிந்து கொள்ளச் செய்வதற்காக.

விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையைக் கண்டறிந்து நிர்ணயம் செய்ய அமெரிக்காவிலிருந்து ஒரு நிபுணர் குழு வருகிறது; தாங்களாக அல்ல; சர்க்காரின் விசேஷ அழைப்பின் பேரில்.

மண் வளம் பெருக்க, பாசன முறையைத் தரமானதாக்க, வடிகால் பிரச்சினையை விளக்கிட, ஒரு நிபுணர் குழு—அமெரிக்காவிலிருந்து; பயிர் கெடுக்கும் பூச்சிகளை அழித்தி[illegible], பூச்சி மருந்தை விமான மூலம் தெளித்திட முறைகூற, உடனிருந்து உதவி செய்ய ஒரு அமெரிக்க நிபுணர் குழு வருகிறது.

புதிய பண்ணைகள் அமைத்திடத் திட்டம் தயாரிக்க ஒரு குழு.

இங்கு நிறைவேற்றப்பட்ட நிலச் சீர்திருத்த சட்டத்தின் பலன்களைக் கண்டறிய ஒரு குழு.

தம்பி! எனக்கே சலிப்பாக இருக்கிறது, முழுப் பட்டியலைக் கூற. ஒன்றை மட்டும் கூறிவிடுகிறேன்—பொருளும் திட்டமும், நிபுணர்களும் மட்டும் அல்ல, ஆயிரம் பொலிகாளைகள் கூட வருகின்றன அமெரிக்காவிலிருந்து.

உணவு முனையில், இதுவரை துரைத்தனம் மேற்கொண்ட முறைகளும் திட்டங்களும் எந்த அளவு பலனற்று, பாழ்பட்டுப் போயிருந்தால், இந்த அளவுக்கு அமெரிக்க உதவி நமக்குத் தேவைப்பட்டிருக்கும் என்பதை மட்டும், எதற்கெடுத்தாலும் எரிச்சல் கொள்பவர்களை விட்டு விட்டு,

எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு

என்ற பண்பறிந்தவர்களிடம் மட்டுமாவது கேட்டுப்பார்.

திட்டமிடுகிறார்கள் தெளிவில்லை; ஆயிரமாயிரம் கோடிகளை அள்ளி வீசுகிறார்கள், ஓரவஞ்சனை நடக்கிறது, ஒழுங்கீனம் இருக்கிறது, ஊழல் மலிந்திருக்கிறது என்று நம்மைப்போன்றவர்கள் கூறியபோதெல்லாம், காங்கிரஸ் துரைமார்கள், கனைத்தனர், கண் சிமிட்டினர், காகிதத்தில் எழுதப்பட்டிருந்த புள்ளி விவரங்களைப் படித்துக்காட்டினர், நமக்குப் பொருளாதார அறிவு போதுமான அளவுக்கு இல்லை, என்று நையாண்டி செய்தனர்—நினைவிலிருக்கிறதல்லவா. இப்போது காங்கிரஸ் அரசில், மேல் மட்டத்திலேயே ஆராய்ச்சி நடத்துகிறார்கள்,

திட்டங்கள் ஏன் போதுமான பலன் தர வில்லை,

என்பதுபற்றி.

காங்கிரஸ் தலைவர்களிலே சிலர், திட்டம் தீட்டிய திலே தவறு இல்லை, அதை நிறைவேற்றிய முறை யிலேதான் கோளாறு வந்துவிட்டது என்கின்றனர்.

திட்டக் குழுவின் துணைத் தலைவரான அசோக் மேத்தாவோ, இல்லை! இல்லை! நிறைவேற்றிய முறை களிலே மட்டுமல்ல, திட்டங்களிலேயே கோளாறு இருக்கிறது என்று கூறுகிறார்.

தொழில் மந்திரியாக உள்ள சஞ்சீவய்யா, திட்டங் களினால் ஏன் தக்க பலன் கிடைக்கவில்லை என்பதைக் கண்டறியவேண்டும். நாம் இதுவரை, திட்டங்கள் வெற்றிபெற, பணம்வேண்டும், மூலப்பொருள்வேண்டும் என்பதுபற்றி மட்டுமே எண்ணிக்கொண்டிருந்துவிட் டோம்; ஏமாந்துவிட்டோம். திட்டங்கள் வெற்றிபெற மக்களிடம் இலட்சிய ஆர்வம் எழவேண்டும்—வயலில் உழைப்பவன், தொழிற்சாலையில் வேலை செய்பவன் எனும் எவருக்கும் திட்டம் வெற்றிபெற நான் பாடுபடு வேன், திட்டத்துக்காக நான் உழைத்தால், எனக்கு இன்னின்னது கிடைத்தாலும் என் வாழ்க்கை வள மாகும் என்ற நம்பிக்கை எழவேண்டும், அவ்விதமான ஆர்வம் வேண்டும். அவ்விதமான ஆர்வம் எழத்தக்க விதமாக திட்டங்களின் விளைவுகள் இருந்திடவேண்டும். அது இல்லாததால்தான், திட்டங்கள் மூலமாகக் கிடைக்கவேண்டிய பலன் கிடைக்கவில்லை" என்று பேசுகிறார்.

திட்ட அமைச்சராக இருந்த நந்தா அவர்களோ, திட்டத்திலே தவறு இல்லை, முறைகளிலே குறை இல்லை, சத்தியம் கெட்டுவிட்டது, இதோ அழைக் கிறேன் சாதுக்களை அவர்கள் அதர்மத்தை அழித் தொழித்து தர்மத்தை நிலைநாட்டுவர் என்று உபதேசிக் கிறார்.

லால்பகதூர், நிலைமைகளைக் கவனித்த பிறகு, சரி சரி, பெரிய பெரிய தொழில்களிலே போய்ச் சிக்கிக் கொள்ள வேண்டாம்; இனி, திட்டத்தில், உடனடியான பலன் தரத்தக்க, மக்களின் அன்றாடத் தேவைப் பொருள்களை பெற்றுத்தரத்தக்கவைகளிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்று கூறுகிறார்.

திட்டத்துக்காகவோ பெரும் பொருள் செலவாகி விட்டது; வெளிநாடுகளில் பெரிய அளவு கடன் வாங்கி யாகிவிட்டது; மக்கள் மீது தாங்க முடியாத வரிச் சுமையை ஏற்றியாகிவிட்டது; விளம்பரமோ அமோக மாகச் செய்தாகிவிட்டது; விழாக்களோ ஆடம்பரமாக! கடைசியில் உட்கார்ந்து பேசுகிறார்கள் ஒவ்வொருவ ராக, முடிவிலே நாட்டுக்குத் தெரிவிக்கிறார்கள்,

திட்டம் போதுமான, எதிர்பார்த்த பலன் தரவில்லை.

எனவே இனித் திட்டமிடுவதிலும், திட்டத்தை நிறைவேற்றுவதிலும் ஒரு மாற்றம் செயயப்போகிறோம்

என்று,

திட்டங்களின் மூலமாக கிடைக்க வேண்டியவை கள் கிடைக்காதுபோன நிலையில் வெறும் பணம் மட்டும் தண்ணீர்பட்டபாடு என்பார்களே அதுபோலப் புரள ஆரம்பித்ததால், விலைகள் ஏறின, விசாரம் வளர்ந் தது; விலைகள் ஏறவே கூலி உயர்ந்தது; கூலி உயரக் கண்டதும் விலையை மீண்டும் ஏற்றினர்; விலை மேலும் ஏறவே கூலி உயர்வு மீண்டும் தேவைப்பட்டது; இவ் விதம் ஒரு விஷச்சக்கரம் சுழல்கிறது, அதன் கொடிய பற்களிலே நாடு சிக்கிச் சங்கடப்படுகிறது.

பணப் புழக்கம் அதிகமாகி உள்ள அளவுக்கு பண்டங்களின் உற்பத்தி அளவும் வளர்ந்தால் நிலைமை யில் நெருக்கடி ஏற்படாது; பசு தின்னும் தீனி அளவுக் காவது பால் கிடைக்க வேண்டுமே! அவ்விதமின்றி தீனிக்குப் பசுவாக இருந்து, பாலுக்காகச் செல்லும் போது; பசு காளையாகி விட்டால்; நிலைமை எப்படி இருக்கும்! அந்த நிலை இப்போது. தம்பி! திட்டங்களுக் காகக் கொட்டிக் கொடுத்தாயிற்று; அதற்காக அவிழ்த் துக் கொட்டப்பட்ட பணம் ஊரெங்கும் உருள்கிறது, ஆனால் அந்த அளவுக்குப் பண்டங்கள் பெருகவில்லை திட்டத்தின்படி. எனவே பண வீக்கம்; பண வீக்கத்தால் விலை ஏற்றம்; விலை ஏற்றத்தால் பணத்தின் மதிப்பு சரிந்துவிட்டது.

திட்டக் கமிஷனில் உள்ள பொருளாதார நிபுணர் அகர்வால்;

ரூபாயின் மதிப்பு கட்டுப்படியாகவில்லை, ரூபாயின் மதிப்பு விழுந்துவிட்டது என்றால், என்ன பொருள்? விலைவாசி ஆறு மடங்கு அதிகமாகிவிட்டது என்று பொருள். இந்த ஏற்றம் மக்கள் தாங்கக்கூடியதல்ல.

இதனையும் பொருளாதார நிபுணர் அகர்வால் விளக்கி யுள்ளார்.

இந்த நிலையில், தம்பி! தாய்மார்கள், லால்பகதூரி டம் வேண்டுகோள்விடுத்ததிலே தவறென்ன இருக்க முடியும்.

வாழவிடு
விலையைக் குறை!

என்பதுதான் இன்று நாடெங்கும் எழுந்துள்ளமுழக்கம்.

ஆனால் எல்லா முழக்கங்களையும்விட, லால்பக தூரின் உள்ளத்தைத் தைக்கத்தக்க எவர் நெஞ்சை யும் நெகிழ்ந்திடச் செய்யத்தக்கதாக அமைந்துவிட் டது, தாய்மார்கள், லால்பகதூருக்குத் தந்த 'ரட்சை' யில் குழந்தையின் உருவத்தைப்பொறித்து, அதிலேயே

என்னை வாழவிடு!
விலைகளைக் கட்டுப்படுத்து!!

என்றும் பொறித்திருப்பது.

பதினேழு ஆண்டுகளுக் [illegible] நாட்டின் ஆள வந்தார்க்கு, இத்தகைய ஓர் [illegible] தரப்படு கிறது. அந்த நிலைக்கு ஆட்சியாளு [illegible] நாட்டினைக் கொண்டுவந்து விட்டனர். ஆ[illegible] ராஜர் கூறு கிறார் எம்மையன்றி எவருளார் [illegible] றது!! என்ன செய்வது, தம்பி! சிரிப்பதா அழு[illegible] வில்லையே!

32-864

அந்திக் கலம்பகம்

"பொன்னி! உனக்குத் தெரியுமேல்லோ பவுனப்பனை—அதாண்டி முன்பு கொடிமரத்துக் கடையிலே வேலை பார்த்து வந்தானே..."

"அந்தப் பிள்ளையாண்டானையா, தெரியுமே. அந்தப் பிள்ளைதான் கொடிமரத்துக் கடையிலே சண்டையை வளர்த்துக்கொண்டு வெளி ஏறி, நடைபாதையிலே கடைவைத்துக்கொண்டுதே..."

"அதுவுந்தெரியுமா உனக்கு. கொடிமரத்துக் கடையிலே எவ்வளவு நல்லபடி இடங்கொடுத்து இருந்தாங்க......அதை விட்டுவிட்டு நடைபாதையிலே கடை வைத்துக் கொள்ள எண்ணம் பிறந்ததே அதைச்சொல்லு..."

"யாருக்குமே ஏமு! கிடைச்சது போதும் என்கிற திருப்தி ஏற்படாவிட்டா, எந்த இடத்திலேயும் நிலைத்து இருக்க எண்ணம் வராது, எந்த வேலையிலேயும் மனசு ஈடு படாது..."

"ஆமாமாம்! எனக்குத் தெரிந்த வக்கீல் ஒருவர், ஒரு ஆறுமாதம் கிரிமினல் கேசுகளிலேதான் விருப்பம் எனக்கு, சிவில் வழக்கு என்ன பிரயோஜனம் என்று சொல்லி, கொலை கேஸ், கொள்ளை வழக்கு இதுகளைத் தேடி அலைவார்; பிறகு ஒரு ஆறுமாதம், கிரிமினல் கேசிலே மேதாவித்தனத்தைக் காட்ட இடம் என்ன இருக்கு, சட்ட நுணுக்க அறிவைக் காட்டவேணுமானு, சிவில் வழக்கிலேதான் முடியும்னு பேசுவார்..."

"இப்படிப் பேசிக்கொண்டே இருப்பார், ஆனு சிவில் வழக்கும் இவரிடம்வராது, கிரிமினல் கேசும் கிடைக்காது. ஏன் பட்டு! அப்படித் தானே!"

"ஆமாம், உனக்குத் தெரியுமா அந்த வக்கீல்?"

"ஏண்டி பொன்னி! அவா யார்? நம்ம பட்டுவோட சீனியரோ?"

"என்னை மட்டந்தட்டணும்னு உனக்கு சர்க்கரைப் பொங்கல் சாப்பிடுகிறபடி இனிக்குதா ஏமு!"

"பொங்கல் கிடைக்குதடி பட்டு! ஒவ்வொரு நாளும். ஒரு கொதி வந்ததோ இல்லையோ, எவ்வளவு பக்குவமாகக் கவனித்தாலும் பொங்கச் சாதம்போலக் குழைந்துபோகுது, எங்களவர் கொண்டுவந்திருக்கிற அரிசி-அது முதல் ரகம்ம்! அந்தப் பொங்கல் கிடைக்குது ஒவ்வொரு நாளும் சர்க்கரை எங்கே கிடைக்குது? சர்க்கரைப் பொங்கல் செய்ய ......"

"மனோன்மணி இருந்திருந்தா சொல்லியிருப்பா, அதிகமா சர்க்கரை சேர்த்துக்கொள்ளக் கூடாதுன்னு......"

"சொல்லுவா ஆனு, அவ சதா வாயிலே சாக்லட் போட்டுக் குதப்பிக்கொண்டுதான் இருப்பா..."

"என் தம்பிக்குக்கூட தித்திப்பு ரொம்ப பிடிக்கும்..."

"உன்னோட தம்பிக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்பதைப் பத்தி எங்களுக்கென்ன..."

"அடுத்த மாதத்திலே வரப்போகிறான், அவனிடமே பேசிக்கொள்வமே..."

"அதெல்லாம் இருக்கட்டும், எதுவோ பவுனப்பனைப்பத்தி பேச வந்திங்களே, அதைச் சொல்லு ஏமு!"

"என்ன இருக்கு சொல்ல! நடை பாதை கடை வைத்து, கூவிக்கூவி விற்றுப்பார்த்த கதையைத்தானே. யாரும் சிந்துவதாகத் தெரியவில்லையே என்று வருத்தம் வந்திருக்கும் கோபம் பிறந்திருக்கும்..."

"கோபமும் வருத்தமும் வந்து என்ன பிரயோஜனம் பொன்னி! இந்தப் பவுனப்பன், பழய இடத்தை விட்டு வெளியே வந்தது கிடக்கட்டும்—என்னமோ கோபம்–தனியாக் கடை வைத்ததுகூட இருக்கட்டும், ஆசை யாரை விடுது! தனியாக் கடை வைத்ததும், தன் னி... ம் உள்ள சரக்கு இப்படிப்பட்டது அப்படிப்பட்டது, விலை மலிவு, தரம் நல்லது என்று கூவி விற்பனை செய்யாமப்படிக்கு, கொடி மரத்துக் கடையிலே, கொசு அதிகம், வாசற்படியிலே வளைவு இருக்குது, தரை வழுக்கல், கூரை ஒழுக்கல் என்று இதையே பேசிப் பேசிப் பொழுதை ஓட்டிக் கொண்டிருக்கலாமா?"

"நான்தான் சொல்றனே ஏமு! எதிலேயும் திருப்தி ஏற்பட முடியாத சுபாவக்காரர்கள் இப்படித்தான்... தெரியுமே எனக்கு......"

"என்ன தெரியும்! பொன்னி! நடைபாதைக் கடை வைத்தது தானே தெரியும் உனக்கு, அத்தோடு முடியல்லே, பவுனப்பனோட விஷயம், இப்ப அந்த நடை பாதைக் கடையையும் மூடிவிட்டு. கோட்டையூரான் மண்டியிலே கோணி தைக்கச் சென்றுகிவிட்ட விஷயம் தெரியுமோ......"

"அட, அது தெரியாமத எனக்கு. போயாகிவிட்டதா, கோட்டையூரான் கடைக்கு"

"ஆமாம்! இவ்வளவு சின்ன வயசிலே எத்தனை இடம் மாறிவிடுவது..."

"ஏமு! அதெல்லாம் அவாளவாளோட இஷ்டம்......நாம என்ன சொல்ல முடியும் அதைப் பத்தி..."

"ஏன்! மனித சுபாவம் எப்படிப்பட்டது என்பதை அறிந்துகொள்ள இப்படிப்பட்ட விஷயங்கள் உபயோகப்படுது. பேசினு பலன் ஏன் இருக்காது..."

"பேச்சு! பேச்சு! பேச்சு! இதுதான் அதிகமாப் போச்சு நம்ம நாட்டிலே. பேச்சைக் குறைக்கணும் செயல் அதிகமாகணும்னு நம்ம நாட்டுப் பெரிய தலைவர்கள் சொல்லியிருக்கிறது தெரியாதோ .."

"தெரியும் பட்டு! நம்ம நாட்டுத் தலைவர்கள் மட்டுமா, வெளிநாட்டிலேகூட இந்த உபதேசம் செய்கிறவர்கள் நிறையப் பேர் இருக்கிரு... பெர்னார்டுஷா இருந்தாரே..."

"பெர்னார்டுஷாவுக்கும் பேச்சு அதிகம் கூடாது என்ற எண்ணமா? ஏண்டி, பொன்னி!"

"கேளேன் சொல்ல வந்ததை ஒருவர் கேட்டாராம் பெர்னார்டு... விடம் பேச்சு அதிகம் கூடாது; செயல் அதிகமாகணும்னு சொல்கிறீர்களே, உங்களோட கருத்து என்ன? அந்தக் கருத்தை நீங்களும் ஒத்துக் கொள்கிறீர்களா என்று. பெர்னார்டுஷா சொன்னாராம்; பேஷான கருத்து, உருப்படியான கருத்து, பேச்சு அதிகம் இருக்கக் கூடாது; அதிகம் பேசாமல் இருப்பதுதான் நல்ல திட்டம். மூன்று மணி நேரம் அந்த நல்ல திட்டத்தைப் பற்றி என்னாலே பேசமுடியும் பேசவா? என்று கேட்டாராம்..."

"பாரேண்டி, அவரோட குறும்... தனத்தை..."

"வேடிக்கை வேடிக்கையா ... கும் பெர்னார்டுஷாவோட ... கள்......"

"நம்ம நாட்டிலே, வேத... பிள்ளையோட பாட்டு, கதை... திருக்கிறயா பட்டு!"

"அதென்ன பட்டுவைக்கேட்கறே குறிப்பிட்டபடி......"

"காரணத்தோடதான். வேதநாயகம்பிள்ளை, பட்டு சொன்னுளே, வேடிக்கை வேடிக்கையா, கருத்துகளை எடுத்துச்சொல்வார் பெர்னார்டுஷா என்பதாக, வேதநாயகத்தோட கருத்துகளும் அவர் எடுத்துச் சொல்கிறவிதமும் அவ்வளவு சுவையாக இருக்கும். மேலும் ஏமு! வேதநாயகம், வழக்கு மன்றத்திலே நீதிபதி வேலை பார்த்தவர்."

"ஓகோ! நீதிபதிகளைப்பற்றி வக்கீல்களுக்குத் தெரிந்திருக்கணுமே என்கிறதாலே, பட்டுவைக் கேட்டயா......"

"போதுமே, என்னை மையமா வைத்துக்கொண்டு நீங்க ரெண்டு பேரும் அரட்டை அடிக்கறது. நான் ஒப்புக்கொள்கிறேன், வேதநாயகத்தோட புத்தகங்களை நான் படித்ததில்லை......"

"பட்டு! நான், பெர்னார்டுஷா புத்தகங்களைப் படிக்கவேண்டாம்னு சொல்லவில்லை. யார் எழுதினதா ... ந்தாலும், நல்ல கருத்து ... படிக்கத்தான் ...

கிழக் ...
இருப் ...
முட் ...
சா ...
கூ ...
ஏ ...

பைத்யங்கள் பலவிதம் என்பது தான்''

"நம்மையும் பைத்யங்கள் என்று நாலுபேர் சொல்கிருர்களோ என்னமோ, யார் கண்டார்கள்?''

"பொன்னி! உன்னோட தம்பி, பட்டுவிடம் கொஞ்சும்போது அடிக்கடி சொல்வான்போல இருக்கு, பைத்யமே! பைத்யமே!ன்னு அந்த கவனத்திலேதான் சொல்ரு பட்டு, இதுபோல......''

"இதுதான் வேதநாயகத்தைப்பற்றின ஆராய்ச்சியோ!''

"ஏமு! நான் கையோடுகொண்டு வருகிறேன், அடுத்ததடவை, வேதநாயகத்தோட புத்தகம். உள்ளபடி ரொம்பச் சுவையாக இருக்கும், பயனும் உண்டு,''

"எதைப்பத்தி அவர் எழுதி இருக்கிருர் பொன்னி!''

"உலக நடவடிக்கைகளைப்பற்றியே எழுதியிருக்கிருர்னு சொல்லணும். இப்ப பேச்சு பலமாக அடிபடுதே, எதிலேயும் ஊழல், இ... ...க்கக்குறைவு என்... பாட்...

...ர்கள்

...ந்து
...கா,
...டி,
...ன்

"காஞ்சி" சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா ரூ. 10–00
ஆறுமாத சந்தா ரூ. 5–00

ஆறுமாத சந்தாவிற்குச் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

ரிடம் நிலம் குவிந்திருப்பதைக் கேலி செய்து பாடி இருப்பதை, பெரிய நிலப் பிரபு படித்தால், அவரே கூடச் சிரிப்பார், அவ்வளவு சுவையாகப் பாடிக் கேட்டிருக்கிருர், எதற்காக ஒருவரிடம் இவ்வளவு நிலம் என்று.'

"பாட்டு கவனமிருக்குதோ பொன்னி! சொல்லேன் கேட்போம்...''

"எல்லாப்பாட்டுக்களேயுமே மனப்பாடம் செய்யணும்னு எண்ணம் எனக்கு. நோம் கிடைக்கல்லே. இந்தப் பாட்டு ஓரளவு நினைவிலே இருக்குது. கேளேன்.

ஊரில் நம் இருப்பிடம் ஒரு
முழ மட்டே பாரிலே நமக்கேன்
பல மனைக் கட்டே.

பூதமானுலும் உண்ண போதும்
மாகாணி ஆதலால் நமக்கேன்
ஆயிரம் காணி?''

"பலே! பலே! அழகான பாட்டுடி பொன்னி. பொறுத்தமான கேள்வி. என்ன பதில் சொல்ல முடியும் நிலத்தைப் பூதம் போலக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கும் நிலப் பிர...ங்கள், இந்தக் கேள்விக்கு.''

"வேதநாயகத்தின் பாட்டு எல்... இப்படித்தான் இருக்கும்.''

...றக்காமல் கொண்டு வா ...னி அவர் புத்தகத்தை...''

...ரெரியில் இருந்தா, நான் எடுத்துப் படித்துப் பார்க்கிறேன்...''

"நம்ம லைப்ரெரிகளில் இந்தப் புத்தகமெல்லாம் உண்டோ?''

"யாருக்குத் தெரியும். வீட்டோடு உள்ள பெண்களுக்கு, பொது லைப்ரெரி நடத்துகிறவர்கள் இப்படிப் பட்ட புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுத்துப் படிக்கச் சொல்ல வேண்டும்.''

"உங்களுக்குத் தெரியுமோ, பிரிட்டிஷ் மியூசியத்தில், அதாவது லைப்ரெரியில், எவ்வளவு புத்தகம் இருக்... ...ன்பது.''

"எங்களுக்கு எப்படி பட்டு! தெரியும். நாங்க சீமைக்கா போய் வந்தோம்!''

"நான் சீமைக்குப் போனதாகச் சொல்லிக்கொண்டு உங்களிடம் மெடல் கேட்கவரவில்லை. ஒரு புத்தகத்திலேதான் படித்தேன். பிரிட்டிஷ் மியூசியததிலே உள்ள புத்தகங்களை அடுக்கிக் கட்டிஞல், அறுபது மைல் நீளம் இருக்குமாம்...''

"அம்மாடி! அவ்வளவு புத்தகமா இருக்குது அங்கே?''

"புத்தகங்கள் மட்டுமா! ஏட்டுச் சுவடிகள், கல்வெட்டுகள், சிலாசாசனங்கள்...''

"ஏமு! நம்முடைய நாட்டிலே இருந்த சில ஓலைச்சுவடிகளெல்லாம் கூட அங்கே இருக்குது...''

அவனு இவனு அறிவாளி?

அவனு இவனு அறிவாளி?
ஆரூடத்தின் துணையின்றி
அனைவரும் அறிந்திட குறிப்புசில
அளிப்பேன் அதன்பின் கூறிடுவீர்.

அவனும் இவனும் ஒரு வகுப்பு
ஆமாம், பள்ளிக்குள்ளேதான்
வெளியே ஒருவன் ஆற்காடு
மற்றவன் பேட்டை பூந்தமல்லி!

ஆற்காட்டான்பேர் அருணகிரி
பேட்டையான் பெயர் பெரியண்ணன்
உன் மகனு பெரியண்ணன் என
கேட்பார் பெரிய கோயிலாரும்.

சிரித்த முகத்துடன் சின்னத்தம்பி
ஆமாம், பய என் மவன் தானெனக் கூறி
ஓட்டிடுவான் வண்டி மகிழ்வாக
பணம் கூட்டிக்கொடுப்பார் என எண்ணி.

அப்பா சௌக்கியமா? என்று
அருணகிரியைக் கேட்டிடுவார்
அறுபதாண்டு விழா நடத்த
ஆசை கொண்ட ஆசிரியர்.

"ஊரில் இல்லை, ஊட்டி சென்றார்".
"ஆமாம், வெயில் ஆகாது"
"அதற்கு அல்ல, அங்கு மாநாடு
கூடுகிறார் மோடார் மன்னரெல்லாம்,"

தொழில்கள் பலப்பல நடத்துவதால்
ஏழைகள் பிழைத்திட வழி கிடைக்கும்
அப்பா கோகுல நாதருக்கு
ஆண்டவன் கடாட்சம் உண்டடென்பார்.

"செஞ்சிக் கோட்டை ஆண்டது யார்?"
"யாரதை ஆண்டால் நமக் கென்ன?"
அருணகிரி தரும் பதிலிதுதான்
அதைப் பொறுத்துக்கொள்வார் ஆசிரியர்.

புத்தகந்தனிலுள்ள அச்சுப்பிழை
பாபர், புகுந்த ஆண்டினை மாற்றிவிடும்
அறிந்து கூறுவான் பெரியண்ணன்
திருத்திக்கொள்வார் ஆசிரியர்.

ஐம்பதுக்கு நாற்பத்தெட்டாடா!
அதிசயமாக இருக்கேடா, என
பேசுவர் மாணவர் பலர் கூடி
தேர்வில் பெரியண்ணன் பெற்ற எண்கண்டு.

நாலு நாளாய் சளி ஜுரமாம்
அவனுக்கல்ல 'டைகர்' நாய்க்குத்தான்
அதனுடன் இருந்தான் அருணகிரி
தேர்வு எழுத உணர்வு வரவில்லை.

'நந்தி நாரதர் கதை கூறு'
எட்மாஸ்டர் நந்தி அல்லவோ, சார்!
நாரதர் நீங்கள், தப்பா, சார்!
அருணகிரி அருளும் 'ஆஸ்யம்' அது.

வகுப்பறையில் பல மாணவர்கள்
கண்டிடும் ஐயப்பாடுகளை
பெரியண்ணன்தான் போக்கிடுவான்
இது பள்ளி அறிந்த இரகசியந்தான்.

பத்தாம் படிவத் தேர்வினிலே
வெற்றி பாங்காய்ப் பெற்றான் பெரியண்ணன்
அவனுடன் வரவில்லை அருணகிரி
ஒன்பதிலேயே ஓய்வெடுத்தான்.

அட்டைப்
படம்
அறிவிப்பது

அவனு இவனு அறிவாளி?
ஆரூடத்தின் துணை எதற்கு?
அருணகிரிக்கு அறிவிருந்தால்
தேர்வில் தோல்வி காண்பானோ?

பிள்ளை மேலே படிக்கணுமாம்
பணத்துக் கெங்கே நான் போவேன்
பிழைத்திட வழி தேடச் சொன்னேன்
கிடைத்திடும் வேலை என்கின்றான்.

சின்னத் தம்பியின் மன மகிழ
சிறப்பாய் தாசில் துரையிடமே
பெற்றான் இடமும் பெரியண்ணன்
கணக்குடன் கடிதம் எழுதும் வேலை.

ஒழுங்குடன் திறமையாய் வேலை செய்யும்
உத்தமன், சத்தியன் என்ற பெயர்
ஒன்பது மணிமுதல் இரவெட்டுவரை
உழைத்து வருவான் பெரியண்ணன்.

பெரியண்ணன் தரும் குறிப்புகளை
பெரிதும் புகழ்ந்தார் தாசில்துரை
எதையும் எளிதில் புரிந்துகொள்ளும்
அறிவுமிக்கவன் இவன் என்பார்.

யார் இதை எல்லாம் கண்டார்கள்?
எள்ளோ கொள்ளோ சொன்னார்கள்
மூட்டைகள் கிடங்கில் சேர்ந்திருக்கு
மூவாயிரம், பணம் தந்துவிட்டேன்.

வட்டிக் கணக்கினைத் தான் பார்க்க
வல்லவர் பெரியவர் நல்லப்பர்
கேட்டுப் பணத்தைக் கரப்பதிலே
கிட்டான் இருக்கான் எனக்கென்ன!

அருணகிரி சொல்வான் இதுபோல
அப்பா அரசைப் பெற்றுவிட்டான்
அரி அரன் திருவடி அவர் இடமாய்
ஆகிவிட்டது 'விதி' வழியே,

மோடார் மன்னன் அருணகிரி
கேட்டால் தருகிறான் கடன்மிகவும்
கோட்டை விட்டு விடப் போகின்றான்
கொஞ்சமும் புத்தி கிடையாது.

'வட்டி சட்டு' பெற்று:வாழ் வட்டம்
வீசி வந்தது வார்த்தை நித்தநித்தம்
தேடிக் கோகுலநாதர் பெற்ற
கோடியும் கரையும் மறையுமென்றார்.

நூறுடன் ஐம்பது சம்பளம் கிடைக்குது
நோன்பு பலித்தது எனச் சொல்லி
திருமணம் செய்திட முனைந்திட்டான்
திரு அருளை நம்பி, சின்னத்தம்பி.

மாமன் மகள் உண்டு, மரகதவல்லி
சொத்ததிகமில்லை, நம்மைப் போலத்தான்
ஐந்து பிள்ளை, ஒரே ஒரு பெண்ணு
ஆரூடம் கூடப் பொருத்தந்தான்.

அப்பா! உன் வார்த்தை தட்டவில்லை
ஆயினும் ஒரு சொல் கேட்டிடுவீர்
தப்பாது பாரம் வீழும் தலைமீது
மாமன் மகளை நான் மணமுடித்தால்.

கொண்டு குறையைப் பின் கூறுவது
நன்றல்ல, அதை அறிவீரே
அங்கு. கன்றுகள் காளைகளாகட்டும்
கடிமணம் பிறகு செய்திடலாம்.

பெரியண்ணன் பேசிய பேச்சினிலே
பொருள் நிறைந்திருப்பதை உணர்ந்துமே
சரி என்று கூறினார் சின்னத்தம்பியுந்தான்
சிரிப்பை முகத்தில அழைத்தமைத்து.

குடும்பம் நடத்தும் வழியின்றி
குதித்துத் திருமணம் செய்பவர்கள்
பொல பொலவெனப் பிள்ளைதனை உதிர்த்து
புலம்புவதுண்டு, கண்டுள்ளோம்.

பெரியண்ணன் பேரறிவாளனன்றோ
திருமணப் பொறியினில் சிக்கவில்லை
திரு திரு வெனும் விழி கொள்ளவில்லை
என நண்பர் நவின்றனர் பாராட்டி.

அருணகிரியின் அருந் திருமணமோ
ஆறு நாட்கள், விழா: ஊர் மெச்ச!
பெருமை மிக்கவர் பெண் கொடுத்தார்
பெண்ணும் பொன்தான் அழகினிலே.

ஆனால் அடிக்கடி வலிப்புண்டாகும்
அறிந்தே பலரும் மறுத்தனராம்
வாழ்வில் சுகமே தரமுடியாத
இந்த வாட்டத்தை ஏனோ கொளவேண்டும்?

தீரப் பலரைக் கேட்டறிந்து
திருமணம் முடித்திட வேண்டுமப்பா
அறிவு அற்றவன் அருணகிரி
அழைத்துக் கொண்டான் அவதியினை

திருமண வைபவம் கண்ட பின்னர்
திருமதிகள் இதைப்பேசி வந்தார்.
வருவது வந்தேதான் தீரும் என
வடித்தார் சிலபேர், பழங்கஞ்சி.

அவனா இவனா அறிவாளி?
ஆரூடம் வேண்டுமோ இஃதறிய
அருணகிரிக்கு அறிவிருந்தால்
கிருமிக் கூட்டைப் பெறு வானோ'

உம் பதிலுரை மிகச்சரி இதுபோது
எனினும் கூறுவேன் மேன்மேலும் சில பலவே.
மனமகிழ் மணமான மறு ஆண்டு
மாநிதி பெற்றான் அருணகிரி. ஆம்.

இறந்தவள் தந்தது இருப்புடனே
புதியவள் கொண்டிட வழி உளவே!
கெட்டிக்காரனடா அருணகிரி
தட்டிவிட்டான் பார்! பெரிய நிதி!

இப்படி இருப்பூர் தனிலுள்ளார்
செப்பினர் சிரிப்பினையுங் கலந்து.
அன்றயன் வகுத்த வழிப்படியே
அனைத்தும் நடத்திடும் என்றார் சிலர்.

மாமன் மகள் மணம் மறுத்துவிட்ட
மதிதனைக்கண்டு வியந்தோமே
கேளும் நடத்தைப் பின்பங்கே
பெரியண்ணன் கெடுத்துக்கொண்ட வாய்ப்பறிய.

அந்த மாமனுக்கு ஓர் மாமன் உண்டு
அவன் மக்கள் பெறாத நிலையினிலே
நெட்டாளச் சீமையில் செத்துவிட்டான்
இங்கு ஐம்பதாயிரம் அனுப்பிவிட்டு.

கொஞ்சம் யோசனை தவறிவிட்டான்
கொடுத்து வைக்காதவன் அவன் பாவம்
மாமன் மகளை இவன் மணந்திருந்தால்
மாடுமனை சீர்மிகக் கிடைத்திருக்கும்.

எல்லாம் அறிந்தவன் என்றானே
என்ன சொல்லுவான் இப்போது
சின்னத்தம்பி கேட்டுக் கைபிசைந்தான்
சிரித்தான் மாமன், ஏளனமாய்.

அவனா இவனா அறிவாளி?
அளவுகோல் அதற்குப் பணந்தானா!
கேட்டிடக் கிளம்புவீர், நானறிவேன்
கேளும், கூறுவேன் இனிச்சிலவும்.

பாதை பாலம் பள்ளிபல
பக்குவமாகக் கட்டிடவே
ஒப்பந்தத் தொழிலைச் செய்பவராம்
ஓயாச் சிரிப்பில் வல்லவராம்,

அப்பு எனப் பெயர் பெயர் பெற்றவராம்
அதிகாரிகட்குற்ற நண்பரவர்
அவர் கேட்ட தகவல் தரச் சொன்னார்
தாசில்துரையும் அன்றொரு நாள்.

மூன்றில் ஒன்று கலந்திடும் என்று
முந்தைய உத்திர வொன்றுண்டு
முட்டாள்தனத்தின் உச்சம தென்று
கூறிடுவேன் நான், காரணம் கொண்டு.

ஒன்றுக்கு மூன்று மணல் கலந்து
ஒன்பது கட்டடம் கட்டியுள்ளேன்
ஆனை இடிக்கட்டும்; அசையாது!
அனுபவ அறிவு; வந்து பாரும்.

பெரியண்ணன் மயங்கிடப் பேசுகிறான்
சரி, சரி, என இவன் தலை ஆட்டுகிறான்
பெண்டு பிள்ளைபற்றி உசாவுகிறான்
பெரியண்ணன் நிலையினை உணருகிறான்.

சூதுவாது அறியாமல் இவன்
தருகிறான் குறிப்புகளைப் பலவும்
குலக்கொடி எனும் மங்கை நல்லாளை
மணமுடித்திட இவன் துணை தேவை என.

தாசில்துரை அவர் தயவினினால்
தலை துள்ளித் திரிகிறான் பயலிவனும்
நிலை தடுமாறி இவன் வீழ்ந்திடவே
நேர்ந்திடும் பார் விரைவினி லென்றார்.

மோடார் வருகுது ஊர்சுற்ற
நோட்டாய்க் குவியுது இலஞ்சமுந்தான்
பாட்டாய்ப் படிக்கிறார் உடன் உள்ளார்
பழிபாவம் கண்டு பயம் கொள்ளார்,

கட்டட ஒப்பந்தக் குறிப்புகளை
காக்காய் பிடித்தவன் பெற்றுவிட்டான்
காரியம் மிஞ்சிவிடு முன்னே
உசாவிட ஏவினார் பெரியதுரை.

சிக்கிக் கொண்டது கைக்கடித[illegible]
பெரியண்ணன் எழுதியதே அதுவும்
இதற்குப் பெற்றது எவ்வளவு என
இடித்துக் கேட்கிறார் அதிகாரி.

ஆயிரம் சத்தியம் கூறுகிறான்
ஆண்டவனைச் சான்றழைக்கிறான்
புத்தி கெட்டவன் இவன் என்று
பூட்டினார் வழக்கு, மேலதிகாரி.

சீட்டு கிழிந்தது வேலைக்கு
சிரிப்பாய்ச் சிரிக்குது அலுவலகம்
சிறைக்கும் இழுத்துச் சென்றார்கள்
சின்னத் தம்பியும் கீழே புரண்டழ.

அருணகிரிக்கு வந்ததோர் அழைப்பு
அமெரிக்க தேசந் தன்னிலிருந்து
இந்திய மண்ணதில் மோடார்கள்
இனிமையாய் ஓடிடும் வழி கூற

விமானம் ஏறிப் பறக்கின்றான் அவன்
இவன் விழியில் கண்ணீர் வடிக்கின்றான்
அவனா இவனா அறிவாளி?
ஆய்ந்து கூறுவீர், இனி நன்றாய்.

நாலாறு மாதங்கள் சிறை இருந்து
நாரும் நரம்புமாய் வெளிவந்தான்
நடைப்பிணமாகி பெரியண்ணன்
நகைத்தனர் பலரும் அதுகண்டு.

மூன்று பங்கு மணல் கலந்திடும்
முன்னைய நண்பனைப் போய்க் கண்டு
முப்பதோ நாற்பதோ சம்பளம் போட்டு
கொடுத்திடும் என்கிறான் ஒரு வேலை

வேலைக்கு நானுன்னைச் சேர்த்துக் கொண்டால்
வீண் விபரீதம் பேசுவர் பலப் பலரும்
கைப்பொருள் கொஞ்சம் தந்திடுவேன்
கடைஒன்று வைத்துப் பிழைத்துக்கொள்.

முந்தி ஓடிக் கடைவீதி சென்று
முழங்கால் மட்டும் தொங்கும் விதம்
முதல்தரமானதோர் மலர் மாலை
வாங்கிவந்து கொடு விரைவாக.

பெரியண்ணன் மாலை வாங்கி வந்து தந்தான்
மானாய்ப் பறக்குது 'ஐயா' மோடாருந்தான்
விமானக்கூடம் செல்கிறார் அப்பு
அருணகிரியை வரவேற்கத்தான்.

உருளையில் புதுமுறை கண்டறிந்து
மோடார் தொழிலில் அதனையுமே புகுத்தி
மிகுதியும் பொருளதையும் குவித்தான்
மின்சார வேகத்தில், வளர்ந்தான் அருணகிரி.

பள்ளியில் முதலாய் உள்ளவர்க்கு
பரிசுகள் தந்திடப் பணமும் தந்தான்
பாடல் ஆடல் கூடங்கட்கு
ஆடகப் பொன் பதக்கம் அளித்திட்டான்.

அருணசிரி பேரால் அமைந்தது
ஆசிரியர்க்காம் பயிற்சிப் பள்ளி
தொழிலதிபர்களில் இவர் போல
தொல் பொருள் ஆய்பவர் இல்லை என்றார்.

துரைத்தனமே தேடி அழைத்திட்டது
துளைத்திடும் வறுமையை துரத்திடவே
தொழில் மயமாக நாட்டை ஆக்கிட
வழிவகை கூறிடும் பேரிடமே,

பற்பல ஆண்டுகள் சென்றிடவே
பயமும் கூச்சமும் நீங்கிடவே
பற்பொடி விற்றிடச் சுற்றுகிறான்
படித்தவன், பழய பெரியண்ணன்.

ஆங்கோர் பெரிய பொதுக்கூட்டம்
அழகழகான மோடார்; அலங்காரம்
அருணகிரிக்கு அங்குப் பாராட்டு
அவரவர் மனம்போல் வாழ்த்துரைகள்,

பள்ளியில் அவரும் படிக்கும்போதே
பாங்கு தெரிந்தது. பளிச்சிட்டே
பயனற்ற கேள்விகள் கேட் டிடுவோம்
பரிகாசம் செய்வார்; பதில் கூறுர்!

பழைய ஆசிரியர் இதுபோலப் பேசி
பற்கள் இழந்ததை அறவே மறந்து
சிரிப்பென்றெண்ணி எழுப்புகிறுர் சத்தம்
சிரம் தாழ்த்துகிறுன் அருணகிரி,

அவனி யெல்லாம் சுற்றிவந்தார்
ஆண்டவர் குலத்தில் பெண் எடுத்தார்
ஆங்கில மாதினே மணமுடித்தார்
அம்மையும் அவரும் வாழ்க நீடுழி.

அகவலாக்கினுர் வாழ்த்துக்களே
அம்பலவாணர், பெரும்புலவர்
அடுத்த மாதம் நூல் வெளியிட
காத்திருக்கின்ருர், பணமின்றி.

காதினில் இவை எலாம் வீழ்ந்திடவே
கடுந்துயர் எழுந்தது; அடக்கிக்கொண்டு
தொலேவினில் நிற்கிருன் பெரியண்ணன்
தொல்லே கொடுக்கிருன் அங்கொருவன்,

அமெரிக்கா தேசம் ரொம்பப் பெரிசா சார்!
எந்தத் திசையிலது இருக்குது, சார்!
ஏன் சார்! இப்படி உடல் இளேச்சிருக்கு
என்ன சார் தொழில், வாழ்க்கைக்கு?

விடைகள் யாவும் அவன் அறிவான்
கொலம்பஸ் கதையும் படித்துள்ளான்
ஆயினும் அறிந்ததைச் சொல்லாது
அவ்விடம் விட்டு அகன்ருனே.

அவனு இவனு அறிவாளி?
அனேத்தையும் கேட்டீர், அதனுலே
ஆருடத்தின் துணே எதற்கு?
அளவுகோல் உண்டா? கூறிடுவீர்.

★

12-ம் பக்கத் தொடர்ச்சி

"நம்ம நாட்டு ஒலேச்சுவடிகள் எப்படி அங்கேபோய்ச் சேர்ந்தது?"

"ஏமு! அதைக் கேட்கறியே! நம்ம நாட்டுக் கோயில்களிலே இநந்த சிலேகளெல்லாம்கூடப்போயிருக்கே அங்கு..."

"நம்ம கோயில் சிலேகளா? என்னடி அக்ரமம்."

"ஆமாம், ஏமு! இங்கே இருந்து களவாடி, சிலபேர் இந்தச் சிலேகளே வெளிநாட்டுக்காரர்களுக்கு விற்று விடுகிருர்கள். போன மாதம் பக்தவத்சலம்கூடப் பேசினுரே இதைப் பத்தி, நல்ல விலே கொடுக்கறதாலே சிலபேர் இந்தத் திருட்டுத்தொழிலில் ஈடுபட்டு..."

"சர்க்கார் என்ன செய்யுது இப்படிப்பட்ட சண்டாளத்தனம் செய்கிறவர்களேக்கூடக் கண்டுபிடிக்காமப்படிக்கு......"

"சரியாப்போச்சு போ! சர்க்காரை நடத்துவது காங்கிரஸ் கட்சி; காங்கிரஸ் கட்சிக்கு, இருக்கிற நேரம் பூராவும் தேர்தலுககு நிதி திரட்டவும், நிதி கொடுததவர்களுக்கு லேசென்சு பெர்மிட் கொடுக்கவும், லேசென்சு பெர்மிட் பெற்றவர்கள் கொள்ளே அடிக்கறதாலே ஏழை எளியவர்கள் குய்யோ முறையோன்னு கூச்சலிடவும், அந்தக் கூச்சலே அடக்க வழி தேடவும் இந்தக் காரியத்துக்கே செலவாகிப் போகுது..."

"இதைப் பத்தி எல்லாம் கேட்டா என்னதான் பதில் சொல்வாளோ தெரியல்லே, காங்கிரஸ் மந்திரிகள்."

"ஏன்! பதில் சொல்லவாத் தெரியாது அவர்களுக்கு. பதில் சொல்லிக்கொண்டுதான் இருக்கிரு. இப்ப அரிசி சரியான படி கிடைக்கவில்லே விலேயும் அதிகம்னு பேசுகிருர்கள், எல்லோரும். பழய கோட்டை பட்டக்காரர் இருககிருரே — அதாவது இப்ப பத்திரிகைகளிலே மன்ருடியார்னு போட்டிருக்கும்—மந்திரியல்லவா!— அவர் பதில் சொல்லி இருக்கிருர்—ஏன், சோற்றையே போட்டு அடைக்கிறிங்க வயற்றை, பாலை சாப்பிடுங்க, உடம்புக்கும் நல்லது என்று..."

"இதுதான், ஒரு மந்திரியோட பதிலா! ஏண்டி பொனனி! இவாளெல்லாம், இந்த நாட்டு ஜனங்களோட பழகறதே இல்லேயா! ஏறிப் போயிருக்கிற அரிசி விலேக்காக ஆகிற செலவுக்கே பணம் கிடைக்காமல் கஷ்டப்படும்போது, பால் வாங்கிச் சாப்பிடச் சொல்றதா! என்ன இது, கேலி செய்கிருரா? பால் விலே என்ன சாதாரணமாகவா இருக்கு! பால் வாங்கிச் சாப்பிடக் கூடிய நிலேயிலே எவ்வளவு பேர் இருக்க முடியும் இந்த கஷ்ட காலத்திலே? இதெல்லாம் அவருக்குத் தெரியாதா..."

"அவருக்கு அதெல்லாம் தெரியுமோ தெரியாதோ, எனக்குத் தெரியாது நம்மநாட்டிலேயே மிகபபெரிய மாட்டுப்பண்ணே அவரிடம் இருக்குது, அது தெரியும் எனக்கு..."

"காங்கயத்து மாடுகள் என்ருலே தரமான மாடுகள்னு பேர்..."

"பட்டு சொல்வது போலத்தான். ஜதை ஐயாயிரம் ரூபாயிலே கூட இருக்கு..."

"இருக்கவேதான் பேசுகிருர் மந்திரி, இதுபோல.....பால் சாப்பிடணுமாம், பால்! இப்ப கிடைக்கிற பால இருக்கே பால் இல்லா பொன்னி, த பால்!"

"அதோ தபால்! ஆபீஸ் ஆள் வருகிருன், அவர் ஏதோ சேதி சொல்லி அனுப்பி இருக்கிருர்போல இருக்கு......"

"வந்துவிட்டானு...சேதி ஒண்ணுமில்லே...எங்க உறவுக்காரப் பெண்ணுக்கு பூ முடிக்கிரு..."

"ஜதையா கிளம்பப்போருங்க போல இருக்கு, பொன்னி! வா நாம புறப்படுவோம்......" ●

...ன்ன காஞ்சிபுரம். 86. திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என்.ஏ. இளங்கோவனுல்